செய்தி வெளியீடு எண்:446 நாள்:14.07.2021

<u>**செய்தி வெளியீடு**</u>

## வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையின் செயல்பாடுகள் குறித்த ஆய்வுக் கூட்டம்
## மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நடைபெற்றது

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் இன்று (14.07.2021) தலைமைச் செயலகத்தில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையின் செயல்பாடுகள் குறித்தும், துறையின் வாயிலாக மேற்கொள்ளப்படும் பல்வேறு திட்டப்பணிகளின் முன்னேற்றம் குறித்தும், புதியதாகச் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ள திட்டங்கள் குறித்தும் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

இந்த ஆய்வுக் கூட்டத்தில், மாநிலத்தின் நிருவாக அமைப்புக்கு முதுகெலும்பாக உள்ள வருவாய்த்துறையின் முக்கிய பணியான மக்கள் குறைதீர்க்கும் பணியினைச் சுட்டிக்காட்டிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், தாமதமின்றி மக்கள் கோரிக்கைகளைத் தீர்த்து வைக்க வேண்டும் என அறிவுறுத்தினார். குறிப்பாக உங்கள் தொகுதியில் முதலமைச்சர் துறையால் பெறப்பட்டுள்ள மனுக்கள் மீது உடனடியாகத் தீர்வுகாணவும், இணையத்தின் வாயிலாகத் துரிதமாகத் துறை சார்ந்த சான்றிதழ்களை வழங்கவும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்.

பேரிடர் மேலாண்மை நிருவாக அமைப்பை வலுப்படுத்தவும், வெள்ளம் மற்றும் வறட்சி நிலைகள் குறித்தும், மழை அளவைத் துல்லியமாகக் கண்காணிக்க அதிக அளவில் மழைமானிகள் அமைப்பது குறித்தும் ஆலோசிக்கப்பட்டன. மேலும், மாநிலத்திலுள்ள நீர்த்தேக்கங்களின் கொள்ளளவினைத் தினமும் கண்காணித்து வடிநிலப் பகுதிகளில் வெள்ள அபாயம் குறித்த எச்சரிக்கைகளை உடனுக்குடன் தெரியப்படுத்தும் வகையில் நிகழ்நேர வெள்ள முன்கணிப்பு அமைப்பு ஏற்படுத்திடவும் அறிவுறுத்தினார். மழை வெள்ளக் காலங்களில் மக்கள் அல்லல்படுவது முற்றிலும் தவிர்க்கப்படவும், உரிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் அனைத்தும்

மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும், இதற்காக நிவாரணப் பொருட்கள் / மீட்புக் குழுக்கள் தயார் நிலையில் இருக்க வேண்டும் எனவும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார். புதிய தொழில்நுட்பங்கள் அனைத்தும் முழுமையாக இத்துறையால் பயன்படுத்தப்பட வேண்டும் எனவும் அறிவுறுத்தினார்.

ஆழ்கடலில் உள்ள மீனவர்களுடனான தொலைத்தொடர்பை மேம்படுத்துவதுடன், தமிழ்நாடு பேரிடர் மீட்புப் படை, தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறை மூலம் பேரிடர் காலங்களில் பொதுமக்களின் உயிருக்கும், உடைமைகளுக்கும், கால்நடைகளுக்கும் ஏற்படும் சேதங்களைத் தவிர்க்கும் பொருட்டு, புதிய முன்னெடுப்பு மூலம் உபகரணங்கள் மற்றும் நிவாரணப் பொருட்களின் அவசரத் தேவை உள்ளவர்களையும், அதனை வழங்கத் தயாராக உள்ள ஆர்வலர்களையும் இணைக்கும் வகையில் இணையவழி அமைப்பு உருவாக்கப்பட வேண்டும் என்றும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆலோசனை வழங்கினார்.

இணையவழிப் பட்டா மாறுதல்கள், நில ஆவணங்களை நவீனப்படுத்துதல், கிராம வரைபடங்களை நவீனமயமாக்குதல், நிலம் தொடர்பான மேல்முறையீடுகளை இணையவழியில் மேற்கொள்ளும் வசதி ஆகியவற்றை ஏற்படுத்துவதுடன், எல்லா மாவட்டங்களிலும் நவீன நில அளவைக் கருவிகளைக் கொண்டு மறு நில அளவை செய்ய தொலைநோக்குத் திட்டம் தீட்டப்பட வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்.

வீட்டுமனை ஒப்படையில் காணப்படும் நடைமுறைச் சிக்கல்கள், மூன்று மாதச் செயல்திட்டம், தினசரிக் கண்காணிப்பு, நீர்ப்பகுதி புறம்போக்கில் வசிப்பவர்களுக்குக் காலியாக உள்ள மாற்று நிலம் கண்டறிந்து ஊரக வளர்ச்சித்துறை / குடிசை மாற்று வாரியம் மூலம் வீட்டு வசதி ஏற்படுத்தித்தரவும், நில எடுப்பினைச் சீர் செய்யவும், நில எடுப்பின் போது கால தாமதத்தினைத் தவிர்க்கவும், தமிழ்நாடு சமூகத் தாக்க மதிப்பீட்டுப் பிரிவை ஏற்படுத்தி, மறுவாழ்வு மற்றும் மறுகுடியமர்வுக்குத் தனி அலகினை நில நிருவாக ஆணையர் அலுவலகத்தில் அமைக்கவும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்.

மேலும், தமிழ்நாடு நிலச்சீர்திருத்தச் (நில உச்சவரம்பு நிர்ணயச் சட்டம், 1961 பிரிவு 37 - A மற்றும் 37 - B) - கீழ், தொழில் மற்றும் வணிக நிறுவனங்களுக்கும், பொது அறக்கட்டளைகளுக்கும் தேவைப்படும் நிலங்களுக்கு அனுமதி வழங்குவதற்கான

வழிமுறைகளை எளிமைப்படுத்தி இணையதளம் மூலம் 6 மாதக் காலத்திற்குள் நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

ஏழை எளியோருக்கு வீட்டுமனை மாற்று இடம், விரைவான பட்டா மாறுதல், அரசு நிலங்களைப் பாதுகாத்தல், சுற்றுச்சூழல் பாதுகாத்தல், நில எடுப்புக்கு விரைவான, நியாயமான இழப்பீடு வழங்குதல், அரசுத் திட்டங்கள், நில மாற்றம்/ பரிவர்த்தனை/ குத்தகை மூலம் தொழில் வளர்ச்சிக்கு வித்திட்டு, தெளிவான நில ஆவணங்கள் கிடைக்கவும், நில உரிமையை உறுதிப்படுத்தும் நிலவரித்திட்டத்தினை துறை மூலம் திறம்படச் செயல்படுத்திட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில், மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் திரு.கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், தலைமைச் செயலாளர் முனைவர் வெ. இறையன்பு, இ.ஆ.ப., நிதித்துறைக் கூடுதல் தலைமைச் செயலாளர் திரு.ச. கிருஷ்ணன், இ.ஆ.ப., கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர் திரு. பணீந்திரரெட்டி, இ.ஆ.ப., நகர்ப்புற நில உச்சவரம்பு மற்றும் நகர்ப்புற நில வரி ஆணையர் / கூடுதல் தலைமைச் செயலாளர் திரு.பி. சிவசங்கரன், இ.ஆ.ப., வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை முதன்மைச் செயலாளர் திரு. குமார் ஜயந்த், இ.ஆ.ப., முதன்மைச் செயலாளர்/நில சீர்திருத்த ஆணையர் திரு. சந்தரகாந்த் பி காம்ப்ளே, இ.ஆ.ப., நில நிருவாக ஆணையர் திரு.எஸ். நாகராஜன், இ.ஆ.ப., நில அளவை மற்றும் நிலவரித்திட்ட இயக்குநர் டாக்டர்.டி.ஜி. வினய், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

•••••••••

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9